**நியு சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு**

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.



# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

# 2025

## உயர்நிலைப் பிரிவு (ஆண்டு 11 & 12)

## Advanced Level (Year 11 & 12)

வழங்கப்படும் நேரம் : 120 நிமிடங்கள் (+10 நிமிடங்கள் வாசிப்பு நேரம்)

Time Given : 120 Minutes (+10 Minutes Reading Time)

**உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.**

**ஆசிரியரின் கவனத்திற்கு :**
**மாணவர்கள் தாமாகவே வாசித்துப் பதிலளிக்க வேண்டும்.**
**ஆசிரியர் வாசிப்பதில் உதவி செய்யலாகாது.**

**Aug 2025**

(1) பின்வரும் ஆங்கிலச் சொற்களைத் தமிழில் எழுதுக. (1 x 10 = 10 Marks)

1. Innovation ____________________
2. Identity ____________________
3. Inclusivity ____________________
4. Multicultural ____________________
5. Adapting traditions ____________________
6. Sustainability ____________________
7. Internet ____________________
8. Global Trends ____________________
9. Climate Change ____________________
10. Indigenous ____________________

(2) பின்வரும் பழமொழிகளுக்கு விளக்கம் தருக. (2 x 5 = 10 Marks)

1. கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு.
2. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்.
3. விளையும் பயிரை முளையிலே தெரியும்
4. கண்டது கற்க பண்டிதன் ஆவான்
5. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

(3) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு ஆங்கிலத்தில் விடைகளை எழுதுக? (20 Marks)

இன்றைய உலகம் பலவிதமான சூழலியல் சவால்களை எதிர்கொள்கிறது. பருவநிலை மாற்றம், நெகிழிப் பயன்பாடு, நீர்வளத்திற்கான போட்டி, காடுகளின் அழிவு, மற்றும் பசுமை நிலங்களின் இழப்பு போன்றவை பெரும் கவலையை ஏற்படுத்துகின்றது. தொழில்துறை வளர்ச்சி, போக்குவரத்து அதிகரிப்பு, மற்றும் நவீன வாழ்க்கை முறை காரணமாக இயற்கை வளங்கள் மோசமாக பாதிக்கப்படுகின்றன.

நிலைத்த வளர்ச்சி என்பது உலக நாடுகளின் முக்கிய இலக்காக உருவாகியுள்ளது. இது சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் முறையில் வளர்ச்சி அடைய வழிகாட்டுகிறது. நிலைத்த வளர்ச்சி (Sustainable Development) என்பது இயற்கை வளங்களை, அழிவு இல்லாமல், சமவிவசாயம் மற்றும் சமூக நலனுடன் பொருந்தும் விதத்தில் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் தத்துவமாகும். நிலைத்த வளர்ச்சியின் முக்கிய அடிப்படைகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பொருளாதார முன்னேற்றம், மற்றும் சமூக சமநிலை ஆகும்.

நெகிழிப் பயன்பாடு என்பது மனித வாழ்க்கையில் இன்றியமையாததாக மாறியுள்ளது. உணவுப் பொட்டலங்கள், குடிநீர்ப் போத்தல்கள், பை மற்றும் கைத்தொலைபேசி உறை போன்ற மற்றும் அனைத்திலும் நெகிழி பயன்படுத்தப்படுகிறது.

நெகிழிப் பயன்பாடு, மனிதர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. நம் உணவுகளில் மைக்ரோ பிளாஸ்டிக் சேர்வது மிகவும் ஆபத்தானது. இது உடல்நலத்துக்கு தீங்கான விளைவுகளை ஏற்படுத்துகிறது.

நெகிழிப் பொருட்கள் அழிய இயற்கைக்கு பல நூறு ஆண்டுகள் தேவைப்படும். பயன்படுத்தப்பட்ட நெகிழிப் பொருட்கள் பெரும்பாலும் கடல்களில் தேங்குகின்றன. அவற்றை மீன்கள், மற்றும் திமிங்கிலங்கள் விழுங்குவதால் உயிரிழக்கின்றன. இதனால் கடல் உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன.

ஆகவே, நெகிழிப் பயன்பாட்டைத் தடை செய்வது, சூழலைப் பாதுகாப்பது, மிக அவசியமான ஒன்றாக மாறியுள்ளது. அதற்கு மீள்பயன்பாட்டுக்குரிய பொருட்களைப் பயன்படுத்துவது, துணிப்பைகளைப் பாவிப்பது, பசுமை மாற்றங்களை ஏற்கும் பழக்கங்களை வளர்ப்பது ஆகியவை நம் பங்களிப்பாக இருக்கலாம். அரசுகள் மற்றும் அமைப்புகள் ஒரு முறையே பயன்படும் நெகிழிப் பொருட்கள் மீது தடை விதிக்க ஆரம்பித்துள்ளன. இது ஒரு நல்ல தொடக்கமாகும்.

பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களிலும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் இளைஞர்கள் மற்றவர்களுக்கு நல்ல உதாரணமாக இருக்க முடியும். மரம் நடுதல், நெகிழிப் பயன்பாடு தவிர்ப்பு, பசுமைப் பயணம், மற்றும் மீள்சுழற்சி ஆகியவற்றை தமது வாழ்க்கையில் நடைமுறையில் கொண்டு வரவேண்டும். இதன் மூலம் சூழலியல் சவால்களை இலகுவாக எதிர் கொண்டு நிலைத்த வளர்ச்சியை ஏற்படுத்த முடியும்.

1. What are the major environmental challenges mentioned in the passage? (3 Marks)

2 What is the main cause of these environmental issues? (3 Marks)

3. What are the three main pillars of sustainable development, according to the passage? (3 Marks)

4. How can youth contribute to sustainable development? (3 Marks)

5. What actions are suggested in the text to reduce plastic pollution? (3 Marks)

**4 பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடைகளை எழுதுக.** (20 Marks)

இன்றைய காலத்தில், புதிய கண்டுபிடிப்புகளும் நவீன தொழில்நுட்பங்களும் உலகில் பல மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதன் மூலம் மனிதர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் எளிதான முறைகளைத்தேடி, புதிய தீர்வுகளைக் கண்டு பிடிக்கிறார்கள். மருத்துவம், பொறியியல், சுற்றுச்சூழல் பராமரிப்பு, மற்றும் கல்வி போன்ற துறைகளில் அதிகமான மாற்றங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. நவீன கண்டுபிடிப்புகளின் முன்னேற்றம் மனிதர்களின் வாழ்க்கையில் ஒட்டுமொத்த மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பொருளாதார வசதிகள் அதிகரித்து வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது.

செயற்கை நுண்ணறிவு உலகில் பெரிதும் வளர்ந்து வருவதால், இந்தப் புதிய தொழில்நுட்பம் மனிதர்களின் வேலைகளை எளிதாக்கிச் சமூக மற்றும் பொருளாதாரச் சவால்களை மேலும் உந்துகிறது. அதற்கு முன்னர், மனிதர்கள் அதிக நேரம் செலவிடும் பணிகள் தற்போது கணினி, இயந்திர மனிதர்கள் போன்றவைகளால் குறைக்கப்படுகின்றன. இதன் விளைவுகள் நமக்கு எதிராகவும் இருக்கக்கூடும். தொழில்நுட்பத்தின் வளர்ச்சி எதிர்காலத்தில் மனிதர்களுக்கான வேலை வாய்ப்புகளைக் குறைத்து, பொருளாதாரத் தாக்கத்தை ஏற்படுத்தும். அத்துடன் தரவுத்திருட்டு போன்ற பாதுகாப்பற்ற நிலையும் உருவாகும்.

மருத்துவத் துறையில் நடந்த மேம்பாடுகள், நோய்கள், மற்றும் சிகிச்சை முறைகள் பற்றிய நமது புரிதலை மாற்றியுள்ளன. பண்டைய காலங்களில் உள்ள மருத்துவ முறைகள் தவிர, இப்போது ரோபோட்–சிகிச்சைகள், ஜெனெடிக் என்ஜினியரிங், நவீன புள்ளிவிபர உபகரணங்கள், மற்றும் 3ம் மொலிகுலர் பிரிண்டிங் போன்ற தொழில்நுட்பங்கள் நோய்களின் கண்டறிதலையும் சிகிச்சையையும் மிகவும் திறம்பட செயற்படுத்துகின்றன. ரோபோ – சிகிச்சை முறைகள் நோயாளிகளை விரைவாகக் குணமடையச் செய்கிறது. செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் 'மெஷின் லெர்னிங்' தொழில் நுட்பங்கள் மூலம் நோயாளிகளுக்கான தனிப்பட்ட சிகிச்சைத் திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. 'டிஜிட்டல்' மருத்துவம் மூலம் வீட்டில் இருந்தபடியே மருத்துவருடன் வீடியோ வழியாக ஆலோசனைகளைப் பெற முடிகிறது. இவை நோயாளிகளுக்குச் சரியான மற்றும் நேர்மையான சிகிச்சையை வழங்கும் வழிகளையும் உருவாக்குகின்றன.

கல்வித் துறையில், மெய்நிகர் வகுப்பறைகள், இணையவழிக் கல்வி மற்றும் உணர்திறன் கொண்ட கற்றல் செயலிகள் போன்றவை மாணவர்களின் அறிவையும் திறமையையும் மேம்படுத்துகின்றன. இணையத்தள வகுப்புகள், வீடியோ விளக்கங்கள், மற்றும் கல்விச் செயலிகள் மூலம் மாணவர்கள் தங்கள் வசதிக்கேற்பப் பாடங்களைக் கற்க முடிகிறது.

மாணவர்களுக்கான இணையவழிப் பாடங்கள், வினாடி வினா கணினி சேவைகள், மற்றும் மின் நூல்கள் போன்றவை கல்வி நிலைங்களில் உபயோகப்படுத்தப்படுகின்றன. இதில், நேரடிக்கல்வி முறையை விட அதிகமான வசதிகள், விரிவான கல்வி முறை, உலகளாவிய அணுகுமுறை போன்ற பல வசதிகள் உள்ளன. இதனால் உலகில் எங்கிருந்தும் இணையம் மூலம் கல்வி கற்ற முடிகிறது.

சுற்றுச்சூழல் பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில், அதனைத் தடுக்கவும் பராமரிக்கவும் தொழில்நுட்பம் ஒரு முக்கியமான கருவியாகச் செயல்படுகிறது.

சுற்றுச்சூழல் பராமரிப்பில், சூரிய மற்றும் காற்றாலை ஆற்றல், மாசு கண்காணிப்புக் கருவிகள் புதுமைகள், பசுமை கட்டிட தொழில்நுட்பம், நீர்நிலைகளை மீட்டமைத்தல், பசுமை வளங்களைப் பாதுகாத்தல், மற்றும் பூமியின் வளங்களை மறு பயன்பாடு செய்தல் என்பனவற்றில் பயன்படுத்தப்படுகின்றன. பசுமைத் தொழில்நுட்பங்களான சூரிய ஒளிச்சக்தி, காற்றுச் சக்தி, மின்சார வாகனங்கள் போன்றவை சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன.

இவ்வாறு, புதுமைகள் உலகில் தொழில்நுட்ப முன்னேற்றங்களின் மூலம் உலகில் பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

1. செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி பற்றி இக்கட்டுரை எவற்றைக் கூறுகிறது? (3 Marks)

2. மருத்துவத் துறையில் நவீன தொழில்நுட்பங்கள் எவ்வாறு உதவுகின்றன? (4 Marks)

3. இந்தப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப முன்னேற்றங்கள் எவ்வாறு மனித வாழ்க்கையைப் பாதிக்கின்றன? (3 Marks)

4. கல்வித் துறையில் புதுமைகள் எவ்வாறு மாணவர்களுக்கான வாய்ப்புகளை அதிகரிக்கின்றன? (3 Marks)

5. சுற்றுச்சூழல் பராமரிப்பில் நவீன தொழில்நுட்பங்கள் எவ்வாறு உதவுகின்றன? (3 Marks)

6. நவீன கண்டுபிடிப்புகளினால் முக்கியமாக வளர்ந்த துறைகள் எவையென இந்த உரைப்பகுதியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது? (4 Marks)

5 பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழுள்ள வினாவிற்கு விடை எழுதுக. (20 Marks)

அவுஸ்திரேலியா, உலகின் மிகுந்த பன்முகத்தன்மை கொண்ட நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இந்தியா, இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிலிருந்து தமிழர்கள் பலரும் வாழ்க்கை முன்னேற்றம், வேலை வாய்ப்புகள், கல்வி போன்ற காரணங்களுக்காக அவுஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்துள்ளனர். இங்கு தமிழ்ச் சமூகத்தினை உருவாக்கி வளர்த்ததில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் தமிழ் முதியவர்கள். இவர்கள் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்தாலும், தங்களது பாரம்பரியத்தையும் மொழியையும் எப்போதும் மறக்கவில்லை.

தமிழ் முதியவர்கள், தங்கள் தாய்நாட்டின் கலாசாரம், மொழி, மரபு ஆகியவற்றைத் தங்களின் இதயத்தில் வைத்திருக்கின்றனர். அவர்கள் வீட்டில் குழந்தைகளுக்கு தமிழ் கற்பிக்க முயற்சிக்கிறார்கள். சிலர் தமிழ்ப்பள்ளிகளில் அல்லது சமூக நிலையங்களில் ஆசிரியராகப் பணியாற்றுகின்றனர். மேலும், அவர்கள் தமிழ்ப் புத்தகங்களை வாசிப்பது, தமிழ்த் திரைப்படங்களைப் பார்ப்பது மற்றும் தமிழ்ப் பாடல்களைக் கேட்பது போன்ற வழிகளில் தங்கள் மொழி, பாரம்பரியத்தைப் பேணுகிறார்கள். மேலும் ஆலயங்களில் கூட சமூக சேவையாளர்களாகப் பணியாற்றுகிறார்கள்.

முதியவர்களது வாழ்க்கை அனுபவம் மற்றும் பாரம்பரியம் இங்கே பிறக்கும் தமிழ்ப் பிள்ளைகளுக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கின்றது. தமிழ்ப் பண்டிகைகள், கலாசார விழாக்கள் மற்றும் குடும்ப நிகழ்ச்சிகளில் அவர்கள் அணியும் உடைகள், உண்ணும் பாரம்பரிய உணவுகள், மற்றும் கோயில்களில் பின்பற்றும் வழிபாட்டு முறைகள் மூலம், கலாசாரம் பேணப்படுகிறது. இதை இளைஞர்களினால் காணக்கூடியதாக இருக்கிறது.

ஆனால், அவுஸ்திரேலியா வாழ்கையில் தமிழ் முதியவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும் இருக்கின்றன. மொழி, கலாசார வேறுபாடு, தனிமை மற்றும் உடல் நலக் குறைபாடுகள் போன்ற பிரச்சனைகள் அவர்களைப் பாதிக்கின்றன. அவர்களுக்கு ஆங்கிலம் பேச இயலாமையால் மருத்துவம், வங்கி, மற்றும் அரசு சேவைகள் போன்றவற்றை அணுகுவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. சில சமயங்களில், குடும்ப உறுப்பினர்களின் வேலைப்பளு காரணமாக மூத்தவர்கள் தனிமையிலேயே இருக்க நேரிடுகிறது.

தமிழ் இளைஞர்கள், முதியவர்களது அனுபவங்களை மதித்து, அவர்களுடன் நேரம் செலவிட வேண்டும். அவர்களுடன் தமிழில் உரையாடுவதன் மூலம் மொழியின் பயிற்சி மட்டும் அல்லாது, குடும்ப உறவும் வலுப்பெறும். மேலும், அவர்களது அனுபவங்களைக் கேட்டு, பதிவு செய்து வைப்பது வருங்கால தலைமுறைக்கும் நன்மை பயக்கும்.

மேலும் தமிழ் முதியவர்கள், தமிழ்மொழி மற்றும் கலாசாரத்தின் பாதுகாவலர்களாக திகழ்கிறார்கள். அவர்களது பங்களிப்பு தமிழ்ச் சமூகத்துக்கும், பன்முக கலாசார அவுஸ்திரேலியாவுக்கும் ஒரு முக்கிய பங்காகும். அவர்களை மதித்து, ஆதரித்து, அவர்களிடமிருந்து கற்றுக்கொள்வது இளைய தலைமுறையினரின் மிகப்பெரிய கடமை யாகும்.

## Question

ஆஸ்திரேலியாவில், தமிழ் முதியவர்கள் மொழி, மற்றும் பண்பாட்டைப் பாதுகாப்பதில் எவ்வாறு தங்கள் அடையாளத்தைப் பேணுகின்றனர் என்பதையும், அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளையும் மதிப்பீடு செய்து தமிழ்முரசுப் பத்திரிகைக்கு கட்டுரை ஒன்றை 150 சொற்களில் எழுதுக. (20 புள்ளிகள்)

6) **பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்கு குறையாமல் எழுதுக.**

(25 Marks)

1. புலம் பெயர் நாட்டில் எமது கலாசாரத்தை வளர்ப்பதற்கு எடுத்த முயச்சியாக எமது பாரம்பரியக்கொண்டாட்டங்களில் ஒன்றான தைப்பொங்கல் விழாவை பெண்டில் ஹில்லில் விமரிசையாகக் கொண்டாட அனுமதித்த கம்பர்லாந்து மாநகரச்சபைத் தலைவருக்கு நன்றி தெரிவிக்குமுகமாகவும், நாம் இக்கொண்டாட்டத்தை எவ்வாறு சிறப்புற நடாத்தினோம் என்பதை விளக்கியும் 250சொற்களில் கடிதம் ஒன்றை எழுதுக.

2. நீர் கல்வி கற்ற பல்கலைக்கழகத்தில் உம்மைச் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ள அழைத்துள்ளனர். இன்றைய காலத்தில் சமூகப் பொறுப்பும் இளைஞர்களின் பங்கும் என்ற தலைப்பில் அங்கு நீர் ஆற்றவிருக்கும் தூண்டல் எழுத்தாக்க உரையை 250 சொற்களில் எழுதுக.

3. 2050ஆம் ஆண்டில் மனித வாழ்க்கை எவ்வாறு மாற்றமடைந்திருக்கும் என்பதைப் பற்றியும், புதுமைகளும் தொழில் நுட்ப முன்னேற்றங்களும் எதிர்கால உலகத்தை எப்படி மாற்றும் என்பதைப் பற்றியும் விபரித்து, வலைப்பூவில் வெளியிட ஒரு பதிவை 250 சொற்களில் எழுதுக.